சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 63/2020

**PW 1 கனகராஜ்** **27.06.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1ம் எதிர்மனுதாரர் என்னுடைய நண்பர் என்று சொன்னால் அவர் எனக்கு உறவினர் மற்றும் உள்ளூர்காரர். அவருடன் அடிக்கடி அவரது வாகத்தில் பாயணம் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்று கேட்டால் இருந்ததாக சொன்னார். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் உரிமம் இல்லாத நபருடன் விபத்து சமயத்தில் பயணம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் எவ்வளவு நேரம் பயணம் செய்திருப்பேன் என்று கேட்டால் அரை மணி நேரம் பயணம் செய்திருப்பேன். 1ம் எதிர்மனுதாரர் அதிவேகமாக வாகனத்தை ஓட்டினாரா என்றால் மெதுவாகத்தான் வாகனத்தை ஓட்டி சென்றார். விபத்து சமயத்தில் எதிர்புறம் வந்த வாகனம் தான் மோதி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லாத காரணத்தினால் இழப்பீடு பெறவேண்டி நான் சென்ற வானத்தின் உரிமையாளரை கட்சி சேர்த்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. நான் அமர்ந்து சென்ற வாகனத்திற்கு 3ம் தரப்பினர் இழப்பீடு பெறும் வகையில் தான் காப்பீடு உள்ளது என்றும் வாகனத்தில் பின்புறம் அமர்ந்து சென்ற நபருக்கு பீரிமியம் செதுவும் செலுத்தவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் அவருடைய வாகனத்திற்கு காப்பீடு எடுத்த நிலையில் அவர்

அவருடைய இரு சக்கர வாகனத்தில் பின்புறம் சென்ற நபருக்கு பீரிமியம் செலுத்தா நிலையில் இந்த மனுவானது 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்ப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வருமானத்தை பொருத்து வருமான வரி தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்வை என்றால் அது சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றும் அது ஆதாரம் இல்லாமல் கோரப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரை கட்சி சேர்க்காத நிலையில் என்னுடைய வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி